மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் - கன்னியாகுமரி - நாகர்கோவில் - குளச்சல்

# சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பாக முகவர்களுக்கான (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

## கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., சிறப்புரையாற்றினார்!

அரியலூர்,செப், 17-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் குளச்சல் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பாக முகவர்களுக்கான (BLA2) ஆலோசனைக் கூட்டம் 15.09.2025 அன்று மதியம் 3.00 மணியளவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், தேரேகால்புதூர், கெங்கா கிரான்ட்யூரில் வைத்து நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணியினை திறம்பட செய்த கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல் சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் 3 பேருக்கு தங்க மோதிரங்கள் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ரெ.மகேஷ் ஏற்பாட்டில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்களால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், மாநில உணவு ஆணைய தலைவர் என். சுரேஷ்ராஜன், மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவைச் செயலாளர் என். தில்லைசெல்வம், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம், உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர,

ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பாக முகவர்கள் (BLA2), கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., டாக்டர் எ.வ.வே.கம்பன்,சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியாவிஜயரங்கன் உட்பட பலர் உள்ளனர்.

கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில்

# கோவை மாநகர் - தெற்கு - வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் அணி திரள்வோம்!

## நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!







கோவை, செப். 17-

கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் சீரிய ஏற்பாட்டில் கரூரில் செப்டம்பர் 17 இன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் கோவை மாநகர் தெற்கு - வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் கரூரை நோக்கி அணி திரள்வோம் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜனநாயகம் என்ற கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பாராட்டி போற்றி வந்த பழமை லோகம், ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 இன்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் சீரிய ஏற்பாட்டில் கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்ற கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் - தெற்கு - வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத்தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், (BLA2) பாகமுகவர்கள், (BLC) பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் (BDA) உறுப்பினர்கள் அனைவரும்

பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் முப்பெரும் விழாவை சிறப்பிக்க கரூர் மாநகர் நோக்கி அணி திரள்வோம் என்று அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

# சேலம் மத்திய மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், செப் 17 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 17ஆம் நாள். தமிழ் இனம், தமிழ் மொழி, சுயமரியாதை, பகுத்தறிவு, மகளிர் உரிமை, மூட நம்பிக்கை ஒழிப்பு என தமிழர்களை தட்டி எழுப்பி தன் மானத்தோடு வாழ வழி காட்டியவர் தந்தை பெரியார். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் நமக்கெல்லாம் தமிழ் உணர்வை ஊட்டிய நாள் தமிழனுக்கு சூடு பிறந்த நாள். தந்தை பெரியாரின் 147வது பிறந்த நாளில் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருஉருவச் சிலைக்கு இன்று (செப்டம்பர் - 17 புதன்கிழமை) காலை 08.30 மணிக்கு மலர்மாலை அணிவித்து, "சமூக நீதிநாள் உறுதிமொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில்சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, வட்டக் கழக,ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள்மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாமல் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் உறுதிமொழி!

செஞ்சி செப்.17-

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மலர் மலர் தூவி மரியாதை செலுத்தி தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் என உறுதிமொழி ஏற்றனர்.

பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் தமிழ் நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சிகிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழாமற்றும் அவரது பிறந்த நாள் விழாவில் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி அப்பம்பட்டில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஏற்பாட்டில்நடைபெற்ற நிகழ்ச்சியில்

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் தொடர்ந்து அவரது தலைமையில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என தி.மு.க. நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய பொருளாளர் இக்பால், ஒன்றிய துணை செயலாளர்கள் மதியழகன், செல்வமணி, மாவட்ட பிரதிநிதிகள் அய்யாதுரை அனையேரி ரவி, கோடீஸ்வரன், ஊராட்சி மன்ற தலைவர் முன்னர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனி,பாலகிருஷ்ணன், குப்பன், லியாகத் அலி,முன்னாள் கவுன்சிலர்கள் ரேவதி கணேசன், ஆவின் இயக்குனர் மாத்தூர் தாஸ்,ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பழனி,துணை அமைப்பாளர் செஞ்சி பழனி,ஊராட்சி நிர்வாகிகள் காந்தி, தாஜுதின், வீரப்பன், குப்பன் உள்ளிட்டஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரையில்

# ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் உறுதிமொழியேற்பு!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் உறுதிமொழியேற்றனர்!

திருவண்ணாமலை, செப். 17-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 ஆம் ஆண்டு பிறந்த நாள் அன்று ஓரணியில் தமிழ்நாடு வாக்குச்சாவடி அளவிலான முன்மொழிவுக் கூட்டங்கள் நடைபெற்றது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என உறுதிமொழி வாசிக்க, அனைவரும் உறுதிமொழி யேற்றனர்.

15.09.2025 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு, திருவண்ணாமலை மாநகராட்சி, அத்தியந்தல், காலை 10.30 மணிக்கு செங்கம் ஒன்றியம், பெரியகோளாப்பாடி ஊராட்சியிலும், பின்னர் காலை 11 மணிக்கு திருவண்ணாமலை மாநகர திமுக, பகுதி எண்1 அலுவலகம் திறப்பு விழா, திருவண்ணாமலை மாநகராட்சி வேங்கிக்கால், காலை 11.30 மணிக்கு, துரிஞ்சாபுரம் ஒன்றியம், நாயுடுமங்கலம் ஊராட்சியிலும், காலை 11.45மணிக்கு, கலசப்பாக்கம் ஒன்றியம், கலசப்பாக்கத்தில், பின்னர் காலை12.15மணிக்குபோளூர் சட்டமன்றத் தொகுதி, களம்பூர் பேரூராட்சியிலும், பின்னர் காலை 12.45மணிக்கு ஆரணி நகரிலும்...

•"ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் இணைந்துள்ள ஒருகோடி + குடும்பத்தினரும் சேர்ந்து, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்! என உறுதி ஏற்கிறோம்.

•நான் "தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாச்சாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவறையறைக்கு எதிராகப் போராடுவேன், தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன்." என உறுதி ஏற்கிறேன்.

•நான் வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டை தலைகுனிய விட்டேன் என உறுதி கூறுகிறேன்.

•நான் "நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன். நம் மாணவர்களுக்குரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன், ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என உறுதி கூறுகிறேன்.

•நான் "தமிழ்மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு (நன்மதிப்பிற்கு) எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்து போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என உறுதியேற்கிறேன்.

•நான் "பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள்" என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி யேற்கிறேன்

என பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் உறுதிமொழியினை வாசிக்க, அனைவரும் உறுதி மொழியை ஏற்றனர்.

உறுதியேற்பு நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தெற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ஆர். ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.வேல்முருகன், கே.வி. ராஜ்குமார், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணி ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன்,

மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு. கணேஷ், விஜி(எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர். எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம் சரவணன், உ.நித்யா,

வடக்கு மாவட்டம், எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், மா.ஏழுமலை, என். கே.ஏ.பாபு, இ.எஸ்.டி.கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி. அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை. சீனுவாசன், பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல்பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினிவினோத்திவாகரன், இராணிவேங்கடேசன், சுந்தர்கருணாநிதி,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் வ.மணிமாறன், கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், கோ.தனசேகர், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், நகர செயலாளர் மு.அன்பழகன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிர மணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என். டி.மனோகரன், எஸ்.எஸ். அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ. சுந்தரேசன், நகரமன்றத் தலைவர் ஏ.சி.மணி.

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக் குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம். காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர். வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத் பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், ஆர். முருகன், வி.வெங்கடேசன், கே.கோவர்தணன், வேணி ஏழுமலை, டி.கே.மோகன், திருவண்ணாமலை பகுதி கழக செயலாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ்,

அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா. ஷெரீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதி நிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

மாலை 4.30மணிக்கு, திருவண்ணாமலை மாநகராட்சி, பகுதி எண்.5, கரியாஞ்செட்டித் தெருவிலும், மாலை 5மணிக்கு, பகுதி எண்.4, மாரியம்மன் கோயில் தெருவிலும், மாலை 5.30மணிக்கு, தியாகி அண்ணாமலை நகரிலும், பகுதி எண்.2, பச்சையம்மன் ஆலயம் அருகிலும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனியவிடமாட்டேன் உறுதியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



சேலம் மத்திய மாவட்டம் அம்மாபேட்டையில் உள்ள அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த தினத்தையொட்டி பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புடன் கூடிய எவர்சில்வர் பாத்திரங்களை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர். இரா. இராஜேந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு. மு. கார்த்திகேயன் பகுதி செயலாளர். கே.டி.ஆர். தனசேகரன், அண்ணா நற்பணி மன்ற செயலாளர். கே. குமாரசாமி. தலைவர். பொட்டு. எம். ஞானசேகரன். பொருளாளர். பொட்டு பி.சேகர். பேர்லாண்ட்ஸ். ரவிக்குமார்.கே. கிருஷ்ணன். தொழிலதிபர்கள். துரைசாமி.அருண்ராஜ், ஆசிரியர்கள். செவ்வேள். சண்முகம் கலைச்செல்வன்.முருகன். கவுன்சிலர். திருஞானம் உட்பட மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.